# இறைத்தூதன்

## கத்தோலிக்க வார இதழ்


எட்டு நாள்களுக்குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடு இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, “உங்களுக்கு அமைதி உரித்தாகுக!” என்று வாழ்த்தினார். பின்னர் அவர் தோமாவிடம், “இதோ! என் கைகள். இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்” என்றார். தோமா அவரைப் பார்த்து, “நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!!” என்றார். இயேசு அவரிடம், “நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர் என்றார். (யோவான் 20:26-29)



# ‘அவர் உயிர்த்தெழுந்தார், அல்லேலூயா!’

## பேராயர் ஜூலியன் லியாவ் வாழ்த்துச் செய்தி

2024 ஆம் ஆண்டிற்கான பாஸ்கா பெருவிழா செய்தியில், கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சிறப்புமிகு முக்கியத்துவத்தைப் பற்றிய ஆழ்ந்து சிந்திக்க நம்பிக்கையாளர்களை அழைக்கிறார்.

உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களுக்கு பாஸ்கா பெருவிழா (ஈஸ்டர்) தரும் மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கையை வலியுறுத்தி, பேராயர், நம்பிக்கையாளர்களை கிறிஸ்துவின் அன்பின் ஒளியில் வாழவும், நம்பிக்கையை வெளிப்படுத்துபவர்களாகவும், மகிழ்ச்சி, நீதி மற்றும் அமைதியைப் பரப்பும் பணியில் நமது சமூகத்திலும் அதற்கு அப்பாலும் தீவிரமாக பங்கேற்கவும் ஊக்குவிக்கிறார்.

**கிறிஸ்துவில் எனதருமை சகோதர சகோதரிகளே,**

பாஸ்கா பெருவிழாவின் மகிழ்ச்சியான கொண்டாட்டத்தில் நாம் ஒன்றித்திருக்கும்போது, இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மூலம் நமக்கு வழங்கப்பட்ட மீட்பின் கொடைக்காக நமது இதயங்கள் மகிழ்ச்சியினாலும் நன்றியினாலும் நிரம்பியுள்ளன. திருப்பாடல் 118:24 இன் உணர்வுகளை எதிரொலித்து, ‘ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே; இன்று அக்களிப்போம்; அகமகிழ்வோம்.’ இந்த நாளை ஆழ்ந்த நன்றியுடன் ஏற்றுக்கொள்வோம். உண்மையிலேயே, நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலானது, கடவுளின் அளவற்ற அன்பு மற்றும் இரக்கத்திற்குச் ஒரு சான்றாக விளங்குவதோடு, அவருடைய கையளிப்பின் தியாகத்தின் வழியாக நிலைவாழ்வை நமக்கு வழங்குகிறது.

மனுக்குலத்தின் ஒவ்வொரு அனுபவத்திலும் கடவுள் உடனிருக்கிறார். மேலும் இந்த அனுபவத்தின் மேன்மை மற்றும் தளர்வு இரண்டையுமே ஆண்டவர் ஏற்றுக்கொள்கிறார். அத்தோடு, துன்பம், இருள் மற்றும் கைவிடப்பட்ட தருணங்களில் கூட, கடவுள் உடன் இருக்கிறார். நம் போராட்டங்களின் மூலமாகவும், ஏன், மரணத்தின் மூலமாகவும் நம்முடன் நடந்து வருகிறார். பாஸ்கா பெருவிழா காலையில் கண்ட வெற்று கல்லறை இந்த நீடித்த உடனிருப்பின் உண்மை அடையாளமாகும் - கிறிஸ்து வாழ்கிறார். இந்த நம்பிக்கையுடனும் புரிதலுடனும் இயேசுவின் உயிர்த்தெழுதல் நம் வாழ்வில் ஒரு நிலையான, வழிகாட்டும் ஆற்றல் என்பதை அறிந்து, நம்மை மகிழ்ச்சியில் நிரப்பி, வாழ்க்கையை முழுமையாகத் தழுவிக்கொள்வதற்கு நமக்கு அதிகார மளித்து, இயேசுவைப் போல வாழவும் நேசிக்கவும் விடுதலை பெறுகிறோம்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில், நம்பிக்கைக்கான மிக உயர்ந்த ஆதாரத்தையும் புதிய தொடக்கங்களின் வாக்குறுதியையும் நாம் காண்கிறோம். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக, நம்மைச் சுற்றியுள்ள உலகிற்கு இந்த நம்பிக்கையை எடுத்துரைப்பவர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்து இருளுக்கு ஒளியையும், துயரத்தில் இருப்பவர்களுக்கு மகிழ்ச்சியையும் கொண்டு வந்தது போல், நாமும் தேவைப்படுபவர்களுக்கு, குறிப்பாக சமூகத்தின் சுற்றுப்புறங்களில் உள்ளவர்களுக்கும், ஒதுக்கப்பட்டவர்களுக்கும், தனிமையில் இருப்பவர்களுக்கும், மறக்கப்பட்டவர்களுக்கும் மகிழ்ச்சி அளிப்பவர்களாக இருக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

நமது ஆண்டவரின் உயிர்த்தெழுதலில் நாம் மகிழ்ச்சியடைவது போல, நாட்டைக் கட்டியெழுப்பும் பணியிலும், பொது நலனுக்காகவும், நமது சமூகங்களில் நீதி மற்றும் அமைதி மேம்பாட்டிற்காகவும் அயராது உழைப்போம். நீதி, இரக்கம், ஆகியவற்றில் வேரூன்றிய சமுதாயத்தை கட்டியெழுப்பும் பணியில் தீவிரமாக ஈடுபடுவோம். இதில்தான் ஒவ்வொரு தனிநபரின் கண்ணியமும் உரிமைகளும் மதிக்கப்பட்டு நிலைநிறுத்தப்படுகின்றன.

மற்ற சமயத்தவரரோடும் பாரம்பரியங்களோடும் நாம் கொண்டிருக்கும் கடமையுணர்வை எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு செயல்படுவோம். பலதரப்பட்ட பின்னணிகள் மற்றும் நம்பிக்கைகள் கொண்ட மக்களிடையே புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பின் பாலங்களை உருவாக்க முயல்வோம், நல்லிணக்கம் மற்றும் குணப்படுத்துதலின் முகவர்களாக இருப்போம். நமது அன்றாட வாழ்வில், இரக்கமும், பணிவும், சேவையும் கொண்ட வாழ்க்கையை நடத்தி, கிறிஸ்துவின் உண்மையான சீடர்களாக வாழ முயற்சி செய்வோம். நம்முடைய செயல்கள் நம்முடைய நம்பிக்கையின் பிரதிபலிப்பாக இருக்கட்டும். மற்றவர்கள் தங்கள் சொந்த வாழ்வில் கிறிஸ்துவின் ஒளியைத் தேடுவதற்கு நமது முன்மாதிரி ஊக்கமளிக்கட்டும். நம்முடைய வார்த்தைகள் மற்றும் செயல்கள் மூலம், கிறிஸ்துவின் உள்ளடங்கிய அன்பை நாம் உருவகப்படுத்துவோம். கடவுளின் குடும்பத்தின் மடியில் அனைவரையும் வரவேற்போம்.

விசுவாசப் பயணத்தில் நாம் திடம் பெருவோமாக. மேலும் உலகில் நமது துணிகர சீடத்துவ, சாட்சிய மற்றும் உலக மாந்தரோடுக் கூடிய ஒன்றிப்பு மூலம் இறையரசுக்குப் புளிப்பு மாவாக இருப்போமாக. ஏழைகள், பாதிக்கப்படக் கூடியவர்கள் மற்றும் மனம் புண்படுத்தப்பட்டோர் மட்டில் கிறிஸ்துவைக் கண்டுணர்வோம். மரியாவின் துணிவைப் பெறுவோம், உண்மையிலேயே பாஸ்கா பெருவிழா ஆண்களாகவும் பெண்களாகவும் இருப்போம். நமது திருஅவையிலும் உலகிலும் நற்செய்தியை உயிர்ப்பித்து, நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் கொண்டு வருவோம். நாம், கிறிஸ்துவில் ஒரே உடலாக, உயிர்த்தெழுதலின் வல்லமைக்கு சாட்சிகளாகவும், உலகில் கடவுளின் அன்பு மற்றும் இரக்கத்தின் ஊற்றுகளாகவும் இருப்போம்.

ஓர் உலகளாவிய திருஅவையாக, நமது உள்ளூர் சூழலை உணர்ந்து, ஒன்றாகப் பயணிப்போம். நமது விசுவாசத்தை ஆழமாக்குவதுடன், உயிர்த்த இறைவனின் மறைப்பரப்பு சீடர் என்ற ஒவ்வொரு அம்சத்திலும் நமது பார்வையை விரிவுபடுத்துவோம்.

எனது இறைவேண்டல் உங்கள் அனைவருடனும் இருக்கும்.

அனைவருக்கும் மகிழ்ச்சி மற்றும் ஆசீர்மிகு பாஸ்கா பெருவிழா நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

+ பேராயர் ஜூலியன் லியாவ்,
கோலாலம்பூர் மாமறைமவட்டம்.

# திருத்தைலத் திருப்பலி கொண்டாட்டங்கள்

### பினாங்கு மறைமாவட்டம்
### ‘கத்தோலிக்க அருள்பணியாளர்களின் தனித்தன்மை’

பினாங்கு. ஜோர்ஜ் கடந்த மார்ச் 18 அன்று, இங்குள்ள புனித அமலோற்பவ அன்னை பங்கில் மாண்புக்குரிய கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களின் திருத்தைலத் திருப்பலி கொண்டாடப்பட்டது. கர்தினால் அவர்களுடன் ஓய்வுப் பெற்ற ஆயர் அந்தோணி செல்வநாயகம் மற்றும் மறைமாவட்டத்தின் அருள்பணியாளர்கள், திருத்தொண்டர்கள் யாவரும் கொண்டாட்டத்தில் பங்கேற்றனர்.

கர்தினால் செபஸ்தியன் அவர்கள் தமது மறையுரையில், இறைமக்கள் மற்றும் அருள்பணியாளர்கள் அனைவரும் மறைநூல் படிப்பினையைத் தற்காலத்தில் பொருத்த மானதாகவும் நிறைவேற்றப்பட்டதாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு ஊக்குவித்தார். அவர் லூக்கா 4:16-21 இறைவாரத்தைப் பகுதியைக் கொண்டு, இயேசு ஏழைகளுக்கு நற்செய்தியும், சிறைப்பட்டோருக்கு விடுதலையும் பார்வையற்றவர்களுக்கு பார்வையை கொண்டு வருவதற்கான தனது பணியை வெளிப்படுத்தியுள்ளார் என்றும், இப்பணியைத் தொடர்வதில் அருள்படியாளர்கள் பெரும் பங்கற்றுகின்றனர் என்பதை வலியுறுத்தினார், குறிப்பாக 2024 ஆம் ஆண்டை ‘இறைவேண்டலுக்கும் 2025 ஆம் ஆண்டை ‘எதிர்நோக்குக்கும்’ அர்ப்பணிக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டினார்.

கத்தோலிக்க அருள்பணியாளர்களின் புனிதத் தன்மையே அவர்களின் தனித்துவம் என்றார் கர்தினால். நற்கருணை, ஒப்புரவு


*கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ்*

மற்றும் நோயிற்பூசுதல் ஆகிய மூன்று அருளடையாளங்களையும் அருள்பொழிவுப் பெற்ற கத்தோலிக்க அருள்பணியாளர்கள் மட்டுமே கொண்டாட முடியும் என்று விளக்கமளித்தார். எனவே, குருத்துவத்தில் தியாகம் மற்றும் நன்றியுணர்வைக் குறிக்கும் நற்கருணை, பாவ மன்னிப்பு எனப்படும் நல்லிணக்கத்தின் புனிதம் மற்றும் நிலைவாழ்வுக்கான குணப்படுத்தும் பணியை அருள்பணியாளர்கள் நிறைவேற்றுகிறாரகள் என்று விவரித்தார்.

### கோலாலம்பூர் மாமறைமாவட்டம்
### ‘அருள்பணியாளர்களின் திருநாள்’

‘தலைமைக் குரு ஒவ்வொருவரும் மனிதரிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, பாவங்களுக்குக் கழுவாயாகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்துவதற்காக மக்கள் சார்பாகக் கடவுள் முன் பணிபுரிய ஏற்படுத்தப்படுகிறார் (5:1) என்று தனது மறையுரை பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் தொடங்கினார். இவ்வாண்டு கடந்த மார்ச் 19 ஆம் திகதி அன்று டேசா ஜெயாவில் புதிதாகப் பங்கு நிலைக்கு உயர்த்தப்பட்ட பங்கான கிறிஸ்து ஒளி பங்கில் இத்திருப்பலி கொண்டாடப்பட்டது.

-தொடர்ச்சி, அடுத்துப் பக்கம்

# திருத்தைலத் திருப்பலி கொண்டாட்டம்

முதல் பக்கத் தொடர்ச்சி.

தொடர்ந்து, பேராயர் ஜூலியன், திருத் தைலத் திருப்பலியில் ஆயருடன் கூடி யிருக்கும் அருள்பணியாளர்கள், அருள் பொழிவுப்பெற்ற தனிநபர்கள் மற்றும் இறைமக்கள் ஆகியோரின் முக்கியத்து வத்தை வலியுறுத்தினார். இது திருஅவையுடனான ஒன்றிப்பையும் இறை மக்களுக்கான புனித சேவையின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பையும் எடுத் துக்காட்டுகிறது என்றார்.

பேராயர் ஜூலியன் தனது சக அருள் பணியாளர்களையொட்டிப் பேசுகையில், ஒருமுறை மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் தங்கள் திருப்பணிகளை நிறைவேற்றும் போது, இறையழைத்தலுக்கு 'ஆகட்டும்' என்று சொன்னதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். பெரும்பாலும் அருள்பணி யாளர்களுக்கு சிறிய அங்கீகாரம் இருப்பதாக அவர் ஒப்புக்கொண்டார், அவர்கள் எப்போதும் புரிந்து கொள்ளப் படுவதில்லை, இருப்பினும் அவர்கள் கடவுளுக்கும் அவருடைய மக்களுக்கும் தங்களைத் தொடர்ந்து பகிர்ந்தளிக் கிறார்கள் என்றார்.

இதர மனிதரைப் போலவே, அருள்பணியா ளர்களும் சோர்வு, மன அழுத்தம், விரக்தி, அழைப்பைக் கைவிடுதல் போன்ற வற்றை எதிர்கொள்கின்றனர் - ஆனாலும் அவர்கள் இவற்றைப் பெரிதெனக் கருதாமல் பணியைத் தொடர்கிறார்கள் என்றார்.

நிறைவாக, "கடவுளின் மக்களே, உங்கள் அருள்பணியாளர்களை அன்பு செய்யவும் அவர்களைக் பராமரிக்கவும் கவனித்துக் கொள்ளவும், புரிந்துகொள்ளவும், எல்லா வற்றிற்கும் மேலாக, கடவுளின் மக்களே, நான் உங்களை மிகவும் தாழ்மையுடன் அழைக்கிறேன். எங்களுக்காக இறைவேண் டல் செய்யுங்கள். - அது உண்மையிலேயே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். உங்களைப் போலவே நாங்களும் நம்பிக்கைப் பயணத்தில் இணைந்துள்ளோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அறுவடை பெரியது, ஆனால் வேலையாட்கள் குறைவு என்று பேராயர் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்,

# தலைநகர் சாலைகளில் ஆதரவற்றோருக்கு அறப்பணி செய்தது அம்பாங் அ.தி.ச.

கோலாலம்பூர்: தவக்காலத்தில் சகோதரத் துவ மனித நேயத்தை வெளிப்படுத்த வேண்டும் எனும் நோக்கத்தில், கோலாலம்பூர் புனித அந்தோணியார் பங்கைச் சேர்ந்த புனித யோவான் அதிச வட்டார மக்கள் ஒன்று சேர்ந்து தலைநகரில் சாலையோரங்களில் படுத்துறங் கும் ஆதரவற்றோருக்கு உணவு வழங் கினதோடு, அவர்களுக்கான அத்தியாவசியப் பொருள்களையும் வழங்கினர்.



கடந்த மாதம் 10ம் தேதி மாலை 5.30 மணிக்கு புனித அந்தோணியார் ஆலயத்தில் ஒன்றுகூடி, பங்கு தந்தை அருள்பணி டாக்டர் கிளரன்ஸ் தேவதாஸ் அவர்களின் ஆசியுடன் இந்த தவக்காலப் பணியைத் தொடங்கினர்.

புனித அந்தோணியார் ஆலயத்திற்கு அருகிலுள்ள ஸ்ரீ கோத்தா பேரங்காடி, ஜாலான் துன் பேராக் சுற்றுவட்டாரத்திற்கு நான்கு-நான்கு பேராக பிரிந்து, இந்த அறப்பணியை மேற்கொண்டனர். இரவில்



தாழ்வாரங்களில் உறங்கும் மக்களைச் சந்திக்கும் போது நமதாண்டவர் இயேசு கிறிஸ்து ஏழைகள் மேல் காட்டிய பரிவையும் கனிவையும் கையாள வேண்டும் என அதிச தலைவர் திரு. புஷ்பராஜ் அறிவுறுத்தி அவர்களை வழியனுப்பினார்.

இனம், சமயம் பாராது வழங்கப்பட்ட உதவியைப் பெற்றுக் கொண்டோரின் நன்றி கலந்து புன்னகையும் ஆசியும் தங்களுக்கு மனநெகிழ்வை தந்தது என இந்த தவக்காலப் பணியை மேற்கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

# இயேசு ஒருபோதும் தன் இதயத்தின் கதவை மூடுவதில்லை!

நம்மைக் குற்றவாளிகள் எனக் குறித்துக் காட்ட இயேசு தன் விரலை எப்போதும் நம்மை நோக்கி நீட்டுவதில்லை என்றும், அவர் சிலுவையில் காட்டியது போல், நம்மை வாரி அணைத்துக்கொள்ள நம்மை நோக்கி தனது கரங்களை விரிக்கிறார் என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த மார்ச் 22, வெள்ளியன்று, தான் வெளியிட்டுள்ள இரண்டு டுவிட்டர் குறுஞ்செய்திகளில் முதலாவது செய்தியில் இவ்வாறு உரைத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசு ஒருபோதும் தன் இதயத்தின் கதவை மூடுவதில்லை என்றும், அதில் உள்ளே நுழைய அவர் எப்போதும் நம்மை அனுமதிக்கிறார் என்றும் கூறியுள்ளார்.

மேலும் இயேசுவினுடைய இத்தகைய



அன்பின் செய்தியை பரப்புவோம் என்றும், அது பாவங்களிலிருந்து நம் இதயங்களை விடுவிப்பதுடன், ஒருபோதும் மங்காது மகிழ்ச்சியுடன் நம்மை நிரப்புகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.

# சாவே, உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?

உயிர்ப்பும் உயிரும் நானே
உலகின் ஒளியும் நானே
என்றே உரைத்த இயேசு!
உலகம் கொண்ட
பொய்மையை உடைத்து
உலகை ஆண்ட
தீமைதனை கொளுத்தி
உலகம் தந்த
துன்பங்களை களைந்து
சாவுதனை வென்று
கல்லறையும் திறக்க
அவர்தம் மெய் உயர
சாவே, உன் வெற்றி எங்கே?
சாவே உன் கொடுக்கு எங்கே?
என்றே முழங்கி
உலக இருளகற்றும் ஞாயிறாக
உண்மை உயிர்த்தது!

இது கிழக்கே தோன்றி
மேற்கே மறைவதல்ல
நாற்திசையும் என்றும்
நாடெங்கும் நம்பிகைதரும்
அணையா சுடரொளி - அதுதான்
கிறிஸ்துயென்ற பேரொளி!
**கிறிஸ்து உயிர்த்தார்**
**அல்லேலூயா!**

ஆர்.கே.

# காணாமல் நம்பும் நாம் பேறுபெற்றோர்!

இன்று பாஸ்கா காலம் 2-ஆம் ஞாயிறாகிய, இறைஇரக்கத்தின் ஞாயிறைக் கொண்டாட திருஅவை நம்மை அழைக்கிறது. 'இயேசுவின் உயிர்ப்பே திருத்தூதர்களின் வல்லமை', அந்த வல்லமையில், நம்பிக்கை கொண்ட மக்களை ஒன்று கூட்டி பகிர்தலில் வாழும் மக்களாக முதல் கிறிஸ்தவர்களை உருவாக்குகின்ற திருத் தூதர்களின் நற்செய்திப் பணியினை எடுத்துக்கூறுகிறது இன்றைய முதல் வாசகம்.

அதே வேளையில், மனுவுரு எடுத்த இயேசு தான் யூதர்கள் எதிர்ப்பார்த்த மெசியா என்றும் அவரே இறைமகன் என்று நம்புவோர் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் என்று விவரிக்கிறது இரண்டாம் வாசகம்.

நற்செய்தியோ, இயேசுவின் விலாவிலிருந்து இரத்தமும் நீரும் கல்வாரியில் வழிந் தோடியது அல்லவா? அந்த விலாவிலும் ஆணிகள் துளைத்த தம் கைகளிலும் தோமாவிடம், "இதோ! என் கைகள். இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்" என்கிறார். தோமா அவரைப் பார்த்து, வியந்துபோய் 'நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!!" என்று அறிக்கையிடுகிறார். தோமாவின் அறிக் கைக்குப் பதிலாக, இயேசு "நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" என்றார்.

இறைஇரக்கத்தின் வெளிப்பாடே நம்மை வாழ வைத்து கொண்டிருக்கின்றது




என்பதை நாம் ஏற்க வேண்டும். இறை இரக்கமின்றி மனுக்குலத்திற்கு மீட்பு ஏது? இயேசு மானிட மகனாக மனுவுருவான தற்கும் இறை இரக்கமே காரணம் என்றால் மிகையாகாது.

இயேசுவின் இரண்டாம் தோற்றத்தின் போது, உயிர்த்த ஆண்டவரை நேரில் கண்டதும், தோமாவின் மனம் சற்றே தடுமாறினாலும், இறுதியில் உயிருள்ள இறைமகனைக் கண்டு கொண்டதன் வழி யாக, இயேசுவை இவ்வுலகில் முதன் முறையாக 'என் ஆண்டவர்! என் கடவுளே' என்று புகழ்ந்துரைத்தவராக வரலாற்றில் வாழ்கிறார். அவரின் சந்தேகம் தீர்ந்தது. ஆனால், சந்தேகத்திற்குக் கிஞ்சிற்றும் இடம் தராமல், அவரில் நம்பிக்கைக்கொள்ளும் நாம் அனைவரும் தோமாவைவிட பேறுபெற்றவர்களாக உள் ளோம்.

நிறைவாக, இன்று திருஅவை இறை இரக்கத்தின் ஞாயிறுவைக் கொண்டாடு கிறது. ஆகவே இயேசுவின் சீடர்களாக இருக்கும் நாம் ஒவ்வொருவரும் 'கிறிஸ்து மரித்தார், கிறிஸ்து உயிர்த்தார், கிறிஸ்து மீண்டும் வந்திடுவார்' என்ற நம்பிக்கையின் மறைபொருளை துணிவுடன் அறிக்கையி டும் வேளை, அவரது இரக்கத்திற்கும் தயவுக்கும் வேண்டுவோம். இரக்கத்தின் ஆண்டவர் இருகரம் விரித்தவராக நம்மை அரவணைக்கிறார். அவரது இரக்கத்தில் அகமகிழ்வோம், நறகருணை பணியாளர் களாக வாழ்வோம்.

ஆர்.கே.

**பாஸ்கா 2ஆம் வாரம் - ஞாயிறு**
**(இறை இரக்கத்தின் ஞாயிறு)**

| | |
|---|---|
| முதல் வாசகம் | தி.ப. 4: 32-35 |
| திரு.பாடல் | 18: 2-4. 16ab-18. 22-24 |
| 2-ம் வாசகம் | 1 யோவான் 5: 1-6 |
| நற்செய்தி | யோவான் 20: 19-31 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம்**